இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 344 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 08 – புதன்கிழமை 24 ஜூலை 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 344 : Thiruvalluvar Year - 2055 - Aadi 08 - Wednesday 24 July 2024 - Dak 12 Pages ₹ 5.00


## 8,883 வணிகர்களுக்கு ரூ.3 கோடியே 29 லட்சம் நிதி உதவி!

# வணிகர்தம் நலனுக்கு புதிய அறிவிப்புகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று (23.07.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வணிகவரி ஆணையர் முனைவர். டி. ஜகந்நாதன், நிதித்துறை இணைச் செயலாளர் கிருஷ்ணனுன்னி, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு வணிகர் நல வாரியக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு உரை!

**சென்னை, ஜூலை 24 -**

**வணிகர்தம் நலனுக்கு புதிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு வணிகர் நல வாரியக் கூட்டத்தில் வெளியிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (23.07.2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவிலேயே முதன்முதலாக வணிகப் பெருமக்களின் நலனுக்காக தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை 35 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 25.9.1989ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த நல வாரியம் இன்று வரைக்கும் சிறப்பாக நடந்து கொண்டு வருகிறது. முதலமைச்சரைத் தலைவராகவும், வணிவரித்துறை அமைச்சரைத் துணைத்தலைவராகவும் கொண்டு இந்த நல வாரியம் அமைக்கப்பட்டது.

தலைவர் கலைஞர் அவர்களால் இந்த வாரியம் உருவாக்கப்பட்ட போது அலுவல் சாரா உறுப்பினர்களாக 20 பேர் இருந்தார்கள். கடந்த ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் தேதி இந்த எண்ணிக்கையை 30 பேர்களாக நம்முடைய அரசு உயர்த்தியது.

இந்த வாரியம் தொடங்கப்பட்ட போது வாரியத்தின் துவக்க நிதியாக 2 கோடி ரூபாயாக இருந்தது. அது 2012ஆம் ஆண்டு ரூ. 5 கோடியாகவும், 2017ஆம் ஆண்டு ரூ. 10 கோடியாகவும் உயர்த்தப்பட்டது. இப்போது 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் திரட்டு நிதி கையிருப்பு உள்ளது.

### உறுப்பினர் கட்டணத்தில் சலுகை!

தொடக்கத்தில் நடைபாதை வணிகர்கள் இல்லாமல் மற்றவர்கள் 500 ரூபாய் கட்டணமாகச் செலுத்தி உறுப்பினர் ஆகலாம் என இருந்தது. இந்த உறுப்பினர் கட்டணத்தில் சலுகை தர நம்முடைய அரசு முடிவெடுத்ததை உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததும், 15.7.2021 முதல் 14.10.2021 வரை மூன்று மாத காலத்திற்குள் உறுப்பினர்களாகச் சேரும் அனைவருக்கும் கட்டணமில்லை என்று அறிவித்தோம். பல்வேறு வணிகர் சங்க பேரமைப்புகள் இந்தச் சேவையை மேலும் நீட்டிக்கச் சொன்னார்கள். அதை ஏற்று 31.3.2022 வரை நீட்டித்தோம். இந்த சேவையின் வாயிலாக 40 ஆயிரத்து 994 புதிய உறுப்பினர்கள் வணிகர் நல வாரியத்தில் இணைந்திருக்கிறார்கள் என்ற செய்தியை நான் மகிழ்ச்சியுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இதுவரை தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு மதிப்பும் கூட்டு வரிச் சட்டம், தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற மொத்த வணிகர்களின் எண்ணிக்கை 88 ஆயிரத்து 219 ஆக உயர்ந்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வருகை தந்திருக்கக் கூடிய வாரிய உறுப்பினர்களாகிய உங்களிடம் இந்த நேரத்தில் நான் வைக்கின்ற வேண்டுகோள் என்னவென்று கேட்டால், அடுத்த கூட்டத்திற்குள் இந்த எண்ணிக்கை நீங்கள் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### சாதாரண மக்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை!

## பிரதமர் நாற்காலியை காப்பாற்றும் வகையில் அமைந்த பட்ஜெட்!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கருத்து!

*புதுடெல்லி, ஜூலை 24 -*

ஒன்றிய பட்ஜெட் குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கருத்து தெரிவிக்கையில், சாதாரண மக்களுக்கு இந்த பட்ஜெட்டில் எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை என்றும், பிரதமர் தமது நாற்காலியை காப்பாற்றும் வகையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.



நாடாளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் தாக்கல் செய்தார்.

இது குறித்து ராகுல் காந்தி கருத்து தெரிவிக்கையில் 'பிரதமர் மோடி தங்களின் நாற்காலியை காப்பாற்றும் வகையில், கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களை திருப்திப்படுத்த இன்றைய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். சாதாரண குடிமக்களுக்கு பட்ஜெட்டில் எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை' என தெரிவித்தார். 'பிரதமர் மோடி தங்களின் நாற்காலியை காப்பாற்றும் வகையில், கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களை திருப்திப்படுத்த இன்றைய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என ராகுல் காந்தி விமர்சித்துள்ளார். சாதாரண குடிமக்களுக்கு பட்ஜெட்டில் எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை' என தெரிவித்தார்.

## மாநிலங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துகிற -

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பட்ஜெட்!

## நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசு தாக்கல் செய்தது!

**புதுடெல்லி, ஜூலை 24 -**

**மாநிலங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துகிற, தமிழ்நாட்டை வஞ்சிக்கிற ஒன்றிய பட்ஜெட்டை நாடாளுமன்ற மக்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ளார்.**

ஒன்றிய பட்ஜெட்டில், கூட்டணிக்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கு நிதியை வாரி வழங்கியுள்ள ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கவில்லை. ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு, நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை,

### தமிழ்நாடு என்ற வார்த்தையே இடம் பெறவில்லை!

தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு, நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த பட்ஜெட்டில், தமிழ்நாடு என்ற வாசகம் கூட இடம்பெறவில்லை.

பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் ஆளும் பீகார், ஆந்திரா மாநிலங்களுக்கு பல திட்டங்களும் அதிக அளவிலான நிதி ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆந்திர மாநில வளர்ச்சிக்காக 15,000 கோடி ரூபாய் சிறப்பு நிதியுதவி அறிவிக்கட்டுள்ளது. பீகார், உத்தரகாண்ட், சிக்கிம் மாநிலங்களுக்கு வெள்ளத்தடுப்புக்கு 11 ஆயிரம் கோடியை ஒதுக்கிய ஒன்றிய அரசு.

தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரண நிதி ஒதுக்கவில்லை. 3 ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பும் இல்லை. தாம்பரம் செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத் திட்டத்திற்கான ஒப்புதல் பற்றியும் அறிவிப்பு இல்லை,

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல் பற்றிய அறிவிப்பும் ஒன்றிய பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. மேலும், தமிழ்நாட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ரயில்வே திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடும் செய்யவில்லை. கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்துதல் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் எதையும் ஒன்றிய அரசு அறிவிக்கவில்லை.

### இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ன ஆயிற்று?

ஆண்டுதோறும் 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்போம் என்று 2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அறிவித்தது. இதன்படி கடந்த 10 ஆண்டுகளில் 20 கோடி பேருக்கு அளித்திருக்க வேண்டும். ஆனால் இது பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. இதே போன்று விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் இதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேபோல், ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் பீகார் மாநிலத்திற்கு நெடுஞ்சாலைகள் திட்டங்களை நிறைவேற்ற 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பாட்னா பூர்ணியா நெடுஞ்சாலை, பக்சார் பாகல்பூர் நெடுஞ்சாலை, போத்கயா ராஜ்கிர்வைசாலி தர்பாங்கா நெடுஞ்சாலை மேம்பாட்டு பணிகளுக்கு 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலம் பீர்பைண்டியில் புதிய 2,400 மெகாவாட் மின் நிலையம் அமைப்பது உள்ளிட்ட மின் திட்டங்கள் 21 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்றும் இதேபோல், பீகாரில் புதிய விமான நிலையங்கள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் விளையாட்டு உள்கட்டமைப்புகள் அமைக்கப்படும் என்றும், பீகாரில் வெள்ள பாதிப்புகளை தடுக்க 11,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் நிர்மலா சீதா ராமன் கூறினார்.

ஏழைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகளை மையப்படுத்தி ஒன்றிய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் திறன் மேம்பாட்டிற்காக பட்ஜெட்டில் 1 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். அடுத்த 2 ஆண்டுகளில் ஒரு கோடி விவசாயிகளை இயற்கை விவசாயத்தில் ஈடுபடுத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த அவர், வேளாண் துறைக்கு பட்ஜெட்டில் 1 லட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்